353

உ

கடவுள் துணை.

# சச்சிதாநந்தம்.

OF THE REGISTRAR ... 19 OCT 1917 ... MADRAS

அறிவை விர்த்திசெய்யும் ஓர் சிறந்த தமிழ்

புஸ்தகம்.

353
4.17

இரண்டாம்பாகம்.

BY

L. SINNATHAMBI.

MADURA.

மதுரை

"சூரியோதயம் பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

...STERED COPY RIGHT.

Q2
N17
176366
(9)

# பொருளடக்கம்.

---

விஷயதானிகளின் நாமமும்.


கடவுள் வணக்கம்.

மெஸ்மரிஸம்.

சுகாதாரம்.

ஒழுக்கம்.—ஆவடையப்ப பிள்ளை-மதுரை.

செயற்கைவாசனை.

கடவுளடியைக் கனவிலும் மறவாதே. அருணகிரி

சதாநந்தசபை (காரியதரிசி) சாத்தூர்

ஜீவகாருண்யம்.

மானஷ வைத்தியம்.


---

உ

கடவுள்துணை.

# சச்சிதானந்தம்.

OFFICE OF THE REGISTRAR OF ... 19 OCT 1917 MADRAS

பூவிலுள்ளன வுள்ளும் புனிதனே!
நாவில் நல்லன நல்க வருளுக.

353
4.17

## கடவுள் வணக்கம்.

இன்னமுதுகனிபாகு கற்கண்டுசீனிதே
னெனருசித்திடவலியவந்
தின்பங்கொடுத்தநினை யென்நேரநின்னன்ப
ரிடையருதருகிநாடி
யுன்னியகருத்தவிழ வுரைகுளறியுடலெங்கு
மோய்ந்தயர்ந்தவசமாகி
யுணர்வறியபேரின்ப வனுபூதியுணர்விலே
யுணர்வார்களுள்பேடிகாண்
கன்னிகையொருத்திசிற் றின்பம்வேம்பென்னினுங்
கைக்கொள்வள்பக்குவத்திற்
கணவனருள்பெறின்முனே சொன்னவாறென்னெனக்
கருதிநகையாவளதுபோற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்குநின்கருணை
தோற்றிற்சுகாரம்பமாஞ்
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. 1

அன்பின்வழியறியாத வென்னைத்தொடர்ந்தென்னை
யறியாதபக்குவத்தே
யாசைப்பெருக்கைப் பெருக்கிக்கொடுத்துநா
னற்றேனலந்தேனென

வென்புலமயங்கவே பித்தேற்றிவிட்டா
யிரங்கியொருவழியாயினு
மின்பவெளமாகவுந் துள்ளங்களிக்கவே
மென்னைநீகலந்ததுண்டோ
தன்பருவமலருக்கு மணமுண்டுவண்டுண்டு
தண்முகைதனக்குமுண்டோ
தமியனேற்கிவ்வணந் திருவுளமிறங்காத
தன்மையாற்றனியிருந்து
துன்பமுறினெங்ஙனே யழியாதவின்னன்பர்
சுகம்வந்துவாய்க்குமுறையாச்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. 2

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென்
கன்னெஞ்சமுருகவிலையே
கருணைக்கிணங்காத வன்மையுநான்முகன்
கற்பிக்கவொருகடவுளோ
வல்லான்வகுத்ததே வாய்க்காலெனும்பெரு
வழக்குக்கிழுக்குமுண்டோ
வானமாய்நின்றின்ப மழையாயிரங்கியெனை
வாழ்விப்பதுன்பரங்காண்
பொல்லாதசேயெனிற் றாய்தள்ளநீதமோ
புகலிடம்பிரிதுமுண்டோ
பொய்வார்த்தைசொல்லிலோ திருவருட்கயலுமாய்ப்
புன்மையெனுவனந்தோ
சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச்
சும்மாயிருக்கவருளாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. 3

---

17626

# மெஸ்மெரிஷம்.

## 2-ம் பாடம்.

OFFICE OF THE REGISTRAR
19 OCT 1917
MADRAS

### உள் மனம்---வெளி மனம்.

நம் திரேகத்தின் நன்மையின்பொருட்டு உள் மனம் வெளி மனம் என இருவகை மனங்கள் கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பாலும் அநேக காரியங்கள் வெளி மனதின் செயலாலேயே நடைபெறுகின்றன. உள்மனதின்செயலோ மிகுந்த ஆச்சரியமுடையது. அதுவெளிமனதின் செய்கையால் நடக்கும் சொற்ப காரியங்களுக்கெல்லாம் தலைகாட்டாது இருந்து, பிராணனுக்கு ஆபத்தாய்வரும் கஷ்டவேளைகளில் வந்து, வெளி மனத்தோடு, சேர்ந்து தன்னுடைய வேலையைச்செய்ய ஆரம்பிக்கின்றது. உதாரணமாக நாம் ஒருகூரைவேய்ந்த வீட்டிற்குள் இருப்பதாக வைத்துக்கொள்வோம் அப்போது அகஸ்மாத்தாய் அவ்வீடு தீப்பற்றிக்கொண்டதானால் நாம் என்னசெய்வோம். நம்பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளவும் மற்றும் அவ்வீட்டிலுள்ள முக்கிய சாமான்களையும் தீக்கிரையாகாமல் காப்பாற்றவும் முயற்சிசெய்கிறோம், அப்போது நம் உள் மனமும் வெளிமனதோடு சேர்ந்து, நமக்குண்டாகுந் தீமையினின்று நாம் தப்பித்துக்கொள்ளப்போதுமான பலத்தையும் ஊக்கத்தையுந் தந்து நம்மைக் காப்பாற்றுகின்றன. சாதாரண வேளைகளில் நம்மால் தூக்கமுடியாத பளுவான சுமைகளையுந் தூக்கிவிடுகிறோம், நம்மால் தாண்டமுடியாத சுவர்களையும் தாண்டிவிடுகிறோம், இவ்விதப் புதிய சக்தியெல்லாம் நமக்கு எப்படி வருகின்றன வென்று சற்று ஆராய்வோம் நாம் அபாயத்தில் சிக்கிக் கஷ்டப்படும்போது நம்மனத்தோடு மறைந்து கிடக்கும் உள்மனம் என்னும் புதியசக்தி திடீரென் வெளிப்பட்டு வெளி மனதோடு சேர்ந்து எப்பேர்ப்பட்ட அரிய காரியங்களையும்செய்து முடிக்கிறது. இச்சக்தி நாம் எல்லோரும் பிரத்தியட்சமாய்ப் பார்க்கத்தக்கவைகளே! அநேகர் இதை தாங்களே நேரில் பார்த்துமிருக்கலாம். நிற்க,

உலகமனைத்தும் கருணைவடிவமாகக்கொண்ட பராபரவஸ்துவாகிய கடவுளானவர், மனிதனுக்கு உள்மனம், வெளிமனமென்று ஏற்படுத்தியது என்னகாரணம் பற்றியோ யெனில் மனிதவாழ்வு நிலையற்றது! திடீரென் எதிர்பாராது ஆபத்துவரக்கூடியது! ஆகை

யால் அவ்வித ஆபத்தினின்று யாதொரு தீமையும் நேராவண்ணம் தப்பித்துக்கொள்வதற்காகவே மேற்சொன்ன உள்மனம் படைக்கப்பட்டிருக்கிறது. மேலும் உள்மனம் தெய்வீக அம்ஸம் பொருந்தியது. இதுவே மனிதன் விரும்பும் ஒவ்வொரு காரியத்திற்கும் அநுகூலமாக இருப்பது. உதாரணமாக நம் உடலை (ஓர் Electric) எலக்டிரிக் விளக்காகவும் நம் உள்மனதை விளக்கிற்கு மின்ஸாரத்தை வாங்கும் பொத்தானுகவும் நம் எண்ணங்களை விளக்குக்கு மின் ஸாரம்வரும் கம்பிகளாகவும் பாவித்துக்கொள்வோம். மனிதனுகிய விளக்குக்கு ஓர் ஆபத்தினிமித்தம் மின்ஸார யந்திரத்தினின்றும் மின்ஸாரம் பெறவேண்டியதிருக்கிறது அவ்வித ஆபத்து வேளையில் நாம் உள்ளங்கசிந்து இரக்கத்தோடும் தெய்வத்தை உள்மனதோடு ஸ்தோத்தரிக்கிறோம், அப்போது நம் ஸ்தோத்திர எண்ணங்களே கம்பியாகத் தெய்வத்தினிடத்துச் செல்கின்றன. அந்நிமிஷமே, எண்ணங்களாகிய கம்பிகளினின்றும் மின்ஸாரமாகிய தேவகிருபை விளக்காகிய மனித உடலிற் பாய்கின்றது. அத்தருணமே மனிதனுகிய நாமும் சிறிது தெய்வத்தன்மை பொருந்தியவராகிறோம். அப்பொழுதே நமக்குநேரிடும் கொடியதுன்பங்களும் சிறிதுசிறிதாகச் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குகின்றது.

இவ்வித வல்லமை வாய்ந்த உள்மனத்தை நாம் சிறிதுநேரம் வசப்படுத்துவதினுலேயே அப்பப்போ ஏற்படுந் தீமைகளினின்றும் விலகிக்கொள்வோமானுல் இவ்வுள்மனதை சதாகாலம் வசப்படுத்தி நடப்பவரின் செய்கை எத்துணை அரியது. ஆகவே, இனி மெஸ்மெரிஷம் பழகும் ஒவ்வொருவரும் தம் உள்மனதை வசப்படுத்த முயலவேண்டும். அப்படி வசப்படுத்தியவர்களே நாம் இக்காலம் புராணங்களில் வாசித்தறியும் மேதாவிகளானவர் இவ்வித மனத்தைத்தான் நம்முன்னுள்ளோர் மறைபொருளாக மந்திரமென்று கூறியுள்ளார். அதாவது மந்திரம் மனதின்திரம் என்றூர். எவனொருவன் தம்மனதை அக்கம்பக்கத்தில் செல்லவிடாது தான் கருதிய விஷயத்திலே செலுத்துவானே அவனே மந்திரவாதி. இக்காரணம் பற்றியே மனமது செவ்வையானுல் மந்திரம் ஜெபிக்கவேண்டாம். மனமது செவ்வையானுல் வாசியை யுயர்த்தவேண்டாம். மனமது செவ்வையானுல் மந்திரம் செவ்வையாமே. இதையே கிறிஸ்துவானவர் கேட்பவன் எவனே அவனுக்குக் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கின்றனர்.

ஆகவே யாரொருவர் தம்மனதை ஒருவழிப்படுத்தி எதைதை கேட்கிறார்களோ அதைதைப்பெறுகின்றனர். ஆதலால் இனி நாமும் நம்மனதை வசப்படுத்தும் முறையைச் சொல்லுவோம். முதலில் தினந்தோறும் நம்வேலையெல்லாம் முடிந்து தூங்கப்போகும்போது நம்மனதைச் சற்றுநேரம் அப்பியாசம்செய்து வரவேண்டும் (அப்பியாசம் செய்யும் முறையாவது) நமக்கியன்ற ஏதாவதொரு இடத்தில் சுகந்த காற்றோட்டமுள்ள அறையில் படுக்கையை விரித்து அதின்மீதுநாம் மல்லாந்து படுத்துக்கொள்ள வேண்டியது. பின்பு நம் திரேகத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றையுந் தளர்த்தி நம் திரேகத்தை ஓர் கட்டையைப்போல் அசையாது போட்டுவிட வேண்டியது கைகளிரண்டையும் மார்பின்மீது வைத்துக்கொள்ள வேண்டியது. அப்போது நம்மனதில் வேறொன்றும் நினைக்காமலுங் கையைக்காலை அசைக்காமலு மிருப்போமானால் நம்மனம் மிக்கப் பரிசுத்தமாயிருக்கும் அப்போது நம் மனம் சிறுகுழந்தையின் மனம்போலிருக்கும் "சுத்தமாகிய வெள்ளை வஸ்திரத்தில் எவ்விதச் சாயத்தையும் கஷ்டமின்றிப் பற்றச்செய்யலாமல்லவா" அத்தன்மை போல் நம்மனமானது சிறுகுழந்தையின் மனம்போல் மிகப் பரிசுத்தமாயிருக்குமானால் நாம் நினைத்தபடி நம்மனதை வசப்படுத்துதல் எளிதாகும். "இவ்வுண்மையை அறிந்தே கிறிஸ்தவ பைபிலை வாசிக்கும்படி சொல்லும் பாதிரிமார்கள் பைபிலை வாசிக்கும் ஒவ்வொருவரும் தம்மனதைச் சிறு குழந்தையின் மனதைப்போல் வைத்துக்கொள்ள வேண்டுமென்று போதிக்கின்றனர்." இனி நாமும் நம்மனதைச் சிறுகுழந்தையின் மனம்போல் மிகப் பரிசுத்தமாக்கியவுடன் நம்மிஷ்டதேவதையாகிய தெய்வத்தினிடத்தே மனதைச் செலுத்தவேண்டியது அப்படித் தெய்வத்தினிடத்தே மனதைச் செலுத்தியவுடன் நமக்குவேண்டிய விஷயங்களைத் தெய்வத்தினிடத்தே முழுமனதோடும் அதாவது உள் மனம் வெளிமனம் இந்த இரண்டுமனதும் ஒருமித்து நாம் விரும்பும் காரியத்திலேயே நோக்கமாயிருக்கவேண்டியது. உனக்கு கல்வி விசேஷமாய் வேண்டுமா? செல்வம் வேண்டுமா? மோக்ஷம் வேண்டுமா? எவை கேட்டாலுஞ்சரி எப்பொழுது நீ உன் முழுமனதோடும் விரும்பிக்கேட்கப்படுகிறையோ அப்பொழுதிலிருந்து உன் விருப்பம் எப்போது பூரண விருப்பமாகின்றதோ அப்போதே கிடைக்கப் பெருவாய். இதுபோலவே மெஸ்மெரிஷம் பழகும் ஒவவொருவரும் தன் மன

தைத் தெய்வத்தினிடத்தே செலுத்தி ஓ! அன்புள்ள பகவானே! உம்முடைய கிருபையான சக்தியை என்மீது செலுத்தியருளும். என்விருப்பத்தின்படி நான் வேண்டும் வஸ்துவையுங் கொடுத்து என்னை, எவ்வித துன்பத்தினின்றும் காத்தருளும். என்றுகொஞ்ச நேரம் ஒரே மனதாக தியானிக்கவேண்டியது. இப்படித் தியானித்துக்கொண்டிருக்கும்போது சற்று நேரத்திற்குள் தூக்கம் வந்துவிடும் தூங்கிவிடவேண்டியது பின் அதிகாலையில் தூக்கத்தினின்றும் எழுந்திருக்கவேண்டியது அப்போதும் நாம் இரவு மனதில் எண்ணிய எண்ணமே முதலில் உண்டாகும் இப்படி நாள்தோறும் பழகப்பழக நம்மனம் மிகப்பரிசுத்தமாகி நாம் விரும்பிய காரியத்திலே மனதை நிறுத்த வெகுசுலபமாக இருக்கும் இப்படிச் சுலபமாக மனதை வசப்படுத்தப் பழகியவுடன் இனிநினைத்தநேரம் திடீரென மனதை வசப்படுத்த முயலவேண்டும். அப்படித்திடீரென மனதை வசப்படுத்தப் பழகினால்தான் நாம் மற்றவரைத் தூங்கவைப்பதற்கும் மற்றவர்களோடுபேசி ஜெயமடைவதற்கும் மிகுந்த பிரயோசனப்படும் இதையே ஏகாக்ரசித்தம் என்றும் சொல்வதுண்டு. அதாவது ஒரேசித்தம் என்று சொல்லுவது இனி இதை நினைத்தநேரமெல்லாம் படுத்துக்கொண்டே அப்பியாசம் செய்யவேண்டுமென்பதில்லை. எப்படியும் அவரவரிஷ்டம்போல் நின்றுகொண்டும் நடந்துகொண்டும் சுகாசனத்தில் உட்கார்ந்துகொண்டும் மற்றவரோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் எந்தெந்த நேரமும் நம்மிஷ்டம் போல் மனதை வசப்படுத்தப் பழகவேண்டும். இப்படி சதாகாலம் மனதை வசப்படுத்தப் பழகுவதே பின் என்றும் அழியா மோக்ஷ வீடடைவதற்கு மிக்க அநுகூலமாகும் மற்றும் உலக வசியமாகிய மெஸ்மெரிஷம் செய்வோருக்கும் இதுமிக்க உதவியாகும். இப்போது இதைவாசிக்கும் நம் நண்பர்காள் இதற்குமுந்திய புஸ்தகத்தால் கண்ணுக்கு முக்யமாகிய காந்தசக்தியையும் இப்போது மனதிற்கு முக்கியமாகிய ஏகாக்ர சித்தத்தையும் பழகிக்கொள்ளும் வழியைத் தெரிந்துகொண்டோம் இனி நம் பிராணனைத் தடுத்தாளும் வழியாகிய பிராணாயாமத்தைப்பற்றிச் சொல்லுவோம்.

---

# புராதன ஆசாரங்களும் தற்கால சீர்திருத்தமும்

## சுகாதாரம்.

நம்முன்னுள்ளோர் நாம் சுகசீவியாய் வாழும்பொருட்டு நமக்குப் பலவித சடங்குகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்திவைத்த விஷயங்களை இக்காலத்தில் நாகரீகம் பெருகப் பெருக அவையெல்லாம் கர்நாடகம் என்று இகழ்ச்சியாய் விட்டுவிட்டனர். அப்படி இப்போது கைவிடப்பட்டவைகளாகிய விரதம் அநுஷ்டானம் என்னும் வழக்கம் சூரிய நமஸ்காரம் இவைகளெல்லாம் இப்போதுள்ள நம்மவர்க்கு ஒருவித வெறுப்பாகத் தெரிவதுபற்றி அவைகளை எல்லாம் கைவிட்டுவிட்டனர். சிலர் அவற்றைக் கைவிடக்கூடாதென்று அநுஷ்டித்து வந்தாலும் அதன் உண்மையை அறியாது நடந்துவருகின்றனர். இனி இவ்வித அநுஷ்டானத்தால் என்ன இருக்கிறது என்று சற்றுகவனிப்போம் முன் வழக்கப்படி ஒவ்வொருவரும் அதிகாலையில்எழுந்து ஜலமலவுபாதைகளைக் கழித்துவிட்டு நதிகுளம் ஏதாவதொன்றில் ஸ்நானம் செய்து சுத்தவஸ்திரமுடுத்தி சந்தியாவந்தனம் காயத்திரி மந்திரம் ஜெபம் முதலியன செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றனர். அப்படிச் செய்வதினால் இவர்கள் மனம் அதிகாலையில் மிகப்பரிசுத்தமாக இருக்கின்றன. மேலும் கீழ்பக்கம் சூரியனைநோக்கி 12-தடவை கீழேவிழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதுண்டு அப்படிச்செய்வதினால் தினந்தோறும் காலையில் 12-கசரத் செய்தமாதிரியாகிறதல்லவா அதன்பின் கொஞ்சநேரம் சூரியனைப் பார்க்கும்படி ஏற்படுத்தியிருக்கின்றனர். அப்படிப்பார்த்து வருவதினால் கண்கள் நல்லபிரகாசமாகவும் அதின்மேல் பட்டைகள் வலுவாகவும் நம் திருஷ்டி விசேஷ அமைப்போடும் பார்ப்போருக்கு ஓர் வஜீகரத் தோற்றத்தையும் உண்டாக்குகின்றன. மேலும் உலகத்தில் எத்தனையோபேர்கள் இவ்வித வஜீகர திருஷ்டியால் அநேக அற்புதங்கள் செய்து வந்திருக்கின்றனர். உதாரணமாக கொங்கணவர் என்னும்ரிஷி தன்மீது எச்சமிட்ட கொக்கைஎரிந்துபோகும்படி பார்த்திருக்கின்றனர். நம்மைக் காத்தருளும் சாக்ஷாத் பரமசிவன் தன்நெற்றிக்கண்ணால் மதனென்னுங் கொடியகாமனையெரித்திருக்கின்றனர். பெண்களில் பத்தினியாகிய தமயந்தி தன்னை இம்சைசெய்த துஷ்ட வேடனையெரிந்துபோகும்படி செய்ததும் இப்பார்வையின் சக்தி

யன்றோ! இன்னும் ஐரோப்பாக்கண்டத்தில் மிகப்பிரபலசக்ரவர்த்தியாக இருந்த நெப்போலியன் சக்ரவர்த்தி ஒருக்கால் தனியாக ஒரு காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது அவருக்குப் பகைவரான சிலர் அவரைத் தனியாய் இருக்கும்போது பிடித்துச் சிறைப்படுத்த வேண்டுமென்று வேவுபார்த்துக்கொண்டு திரிந்து கடைசியில் அவர் தனியாய்ச் செல்வதையறிந்து சுமார் ஐம்பதுபேர் வரை ஆயுதபாணிகளாய்ப்போய் அவரைப் பிடிப்பதற்காகச் சுற்றி வளைந்துகொண்டனர். அதையறிந்த நெப்போலியன் சக்ரவர்த்தி தான் சிறிதும் பயப்படாமல் அவர்களைத் தன் வஸியப் பார்வையோடு விழித்துப் பார்த்ததும் நான்! யார்! தெரியுமா? என் பெயர் நெப்போலியன் சக்ரவர்த்தி, ஜாக்ரதை! என்று சொல்லியமாத்திரத்தில் ஆயுதபாணிகளான அனைவரும் தங்கள் கையில் கூர்மைபொருந்திய ஆயுதங்களைத் தாங்கி நின்றும் ஒன்றும் செய்ய இயலாது அப்படியே திகைத்து நின்றனர்.

இதுவெல்லாம் முன்கூறிய வஸ்யபார்வையின் சக்தியல்லவா? இப்படி மனம்பரிசுத்தமாகிறதும் இரண்டாவது சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதால் நம் திரேகத்திலுள்ள எல்லா அவயவங்களுக்கும் நல்லசுத்த இரத்தம் பரவி நமக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தந்து முகத்தில் (**Aura**) என்று சொல்லப்படும் தேஜஸ் பொருந்தி எப்போதும் ஸ்வலித்துக்கொண் டிருக்கின்றன. இவ்வளவு அழகுங் கூடியமுகத்திற்கு சூரியனைப் பார்ப்பதினால் உண்டாகும் வஜீகர திருஷ்டியுஞ் சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமா! ஒன்றையும் இணை சொல்ல முடியாது அவ்வளவு ஜோதியாய் இலங்குமல்லவா? இது பற்றியன்றோ? எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானமென்றும் சிரசிற்கு நயனம் பிரதானமென்றும் கூறியிருக்கின்றனர். அழகிய வதனத்திற்கு நேத்ரம் இல்லாதுபோனால் அவை சந்திரனில்லா வானம்போலும் தாமரையில்லாத் தடாகம்போலும் வெறுப்புற்றிருக்குமன்றோ? ஆனதுபற்றியே நம்முன்னுள்ளோர் சிரசிற்கு நயனம் பிரதானமென்று கூறியது சரியானதே! இன்னும் சிரசிற்கு ஆதாரமாயுள்ள திரேகம் நன்றாயிருக்கும்பொருட்டு அநேக விரதங்களை ஏற்படுத்திவைத்திருக்கின்றனர். அதாவது கார்த்திகை, அமாவாசை, இப்படிப்பட்ட நாளைக்கெல்லாம் நாம் கட்டாயம் விரதம் இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றனர். அதுவும் நம்

நன்மையின்பொருட்டே? நாம் தினேதினே சாப்பிட்டுவரும் ஆகாரங்களில் கொஞ்சங் கொஞ்சமாய் நம்திரேகத்தில் இருந்து வருகின்றன. அப்படி இருந்து வருவதை நாம் சரியானபடி சுத்தம் செய்து கொண்டால் நல்லது இல்லையேல் அநேக வியாதிக்குக் காரணமாக நேருகின்றது அப்படி வியாதிவராவண்ணம் தடுப்பதற்காகவே ஒரு மாசத்தில் ஒருதடவை வரும் அமாவாசை அல்லது 27 நாளைக்கு ஒருதடவை வரும் கார்த்திகை இந்தநாளில் விரதம் இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றனர் விரதம் இருக்கும் முறையாவது அவரவர் சக்திக்குத் தகுந்தபடி விரதநாளில் காலை 6 - மணிமுதல் 2-மணிவரை ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியிருந்து பின்சுமாரான போஜனமும் இலேசாய் ஜீரணிக்கத்தக்க காய் கரிகளும்வைத்துச் சாப்பிடவேண்டியது. இப்படி காலை 6 - மணிமுதல் மாலை 2-மணிவரை 8-மணிநேரம் வயிற்றைக் காலிபோடுவதால் அங்குள்ள வயிற்றுக்குக்கேடான மலச்சிக்கல் ஜீரணிக்காதது முதலியதுகளெல்லாம் நீங்கப்பெற்று சுகமடைகின்றன உதாரணமாக நாம் ஒரு பாத்திரத்தில் தொடர்ச்சியாய் தண்ணீரே ஊற்றிவைத்திருப்போமானல் அவை கொஞ்சநாளையில் பாசம் வழுவழுப்பு முதலியனபற்றி ஒரு விதநாற்றமுண்டாகுமல்லவா அப்போது அதைக்கழுவி ஒருநாள் வெயிலில் காயவைத்துத் தண்ணீர் வார்ப்போமானல் பின் நன்ருய் இருக்குமன்ரே? இதுபோலவே நம் திரேகமாகிய பாண்டத்தையும் கெட்டுப்போகாதபடி மாதத்திற்கு ஒருதடவை ஏதேனும் ஒரு விரதம் இருந்து நன்ருய் வயிற்றைக் காயப்போட்டுப்பின் சாப்பிட்டு கிடைத்தற்கரிதாகிய இவ்வுடலைக் காப்பாற்றவேண்டும். சிலர் தாங்கள் விரதம் இருப்பதாகச்சொல்லி சாதாரணகாலங்களில் சாப்பிடும் ஆகாரத்தைவிட அன்றுதினம் தோசை என்றும் உப்புமா என்றும் காப்பி என்றும் அளவுக்குமீறி சாப்பிட்டு தங்கள் திரேகத்தைக்கெடுத்துக் கொள்கிருர்கள் இவர்களெல்லாம் இந்த விரதம் இன்னகாரியத்திற்காக இருக்கிரேம் என்பது தெரியாமலே குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொண்டதுபோற் தங்கள் அறியாமையால் அப்படியிருக்கின்றனர். இன்னும் நம்முன்ஞேர் விரதநாள் என்று வெத்துநாளாய் ஏற்படுத்தாமல் அதுவும் ஒரு தெய்வத்தின் பக்திக்காகவுமென்றே ஏற்படுத்தியிருக்கின்றனர். அதாவது ஒரு தாயானவள் தன்பிள்ளையின் வியாதிக்கு ஒருமருந்து கொடுக்கும் போது அப்பா! இதைச் சாப்பிட்டுவிடு வெல்லம் தருகிறேன் என்று

இனிப்பு காட்டுவதுபோல் நம் முன்னுள்ளோரும் நம் நன்மையின் பொருட்டு சும்மா பட்டினியாயிருக்க வேண்டுமென்றால் நம்பமாட்டார்களென்று ஒரு தெய்வத்தின்பேரில் பக்தியையும் செலுத்தும்படி ஏற்படுத்தி இருக்கின்றனர். அப்படி ஏற்படுத்தி யிருக்கும் நாளில் நாம் கெட்டகாரியங்களில் பிரவேசிக்காமல் நல்லொழுக்கமாக இருக்கும்படிக்காகவே ஒழுக்கமும் ஏற்பட்டது. இனி ஒழுக்கத்தைப்பற்றி விஸ்தரித்துச் சொல்லுவோம்.

---

## ஒழுக்கம்.

---

### ஒழுக்கம் உயர்குலத்தினன்று.

ஒழுக்கமானது யாவர்க்குஞ் சிறப்பைத் தருகின்றதாதலால் அதை உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்ததாகக் கருதி அதற்கிடையூறில்லாமல் நடத்தவேண்டுமென்பதை யுணர்ந்தவர்களே ஒழுக்கமுடையவர்கள். இக்கருத்திற்கிணங்க நமது தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய செய்யுளால் தெளிக.

ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

இம்மைமறுமைக்குத் துணையாக விருக்கும் தர்மமெதுவென்று பலநூல்களையுமாராயு மிடத்து ஒழுக்கமே முக்யமெனச் சொல்லி யிருக்கின்றமையால் அவ்வொழுக்கத்தை எவ்விதத்திலும் தப்பிப் போகாதபடி காப்பாற்றவேண்டும்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை.

சாதியாசாரத்துக்குத்தக்க வொழுக்கத்தை யனுசரித்து நடத்தலால் நல்ல குலத்தனுவானென்னும் அவ்வொழுக்கத்திற்கு விரோதமாய் நடப்பவன் இழிகுலனுவானென்றும் பலநூலிலும் விரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்
தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும்.

பிராமணன் வேதத்தை மறந்துவிடுவானானாலும் மறுபடியுங் கற்றுக் கொள்ளலாம் ஒழுக்கத்தை விட்டுவிட்டால் அவனது உயர்ந்த ஜாதித்தன்மை கெடுமேயல்லது உயர் வாகமாட்டாது. பொறாமையுடையவனிடத்துச்செல்வம் நிலைபாது போலவே நல்லொழுக்க மில்லாதவனிடத்து மேன்மை நிலைத்திருக்கமாட்டாது.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

ஒழுக்கத்தைவிட்டால் இழிகுலஸ்தனாகவேண்டுமென் றறிந்த புத்திமான்கள் அவ்வொழுக்கத்திலிருந்து சிறிதும் வழுவார்கள்.

நல்லொழுக்கத்தால் ஷிஸ்டத்வமும் அஃதில்லாமையால் ப்ரஷ்டத்வமும் உண்டாகுமென்பதற்கு ப்ரமாணமென்னவெனில் நன்மைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமென்றும் தீமைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமில்லாமை யென்றும் சொல்லப்பட் டிருப்பதுவேயாம். ஒழுக்கமுடையவர்கள் தங்கள் ஜாதிக்குங் குலத்துக்குந் தகாத பொய் முதலியவைகளை மறந்து நீக்கி விடுவார்கள். ஒருவேளை நீக்காமலிருப்பார்களாகில் நல்லொழுக்க மில்லாத நீசரெனப்படுவதற்கு ஸந்தேகிக்கவேண்டுவதில்லை.

கல்விக்குப்பயன் அறிவு அறிவுக்குப்பயன் ஒழுக்கம் இவ்வொழுக்கத்தை யுணர்ந்து நடக்கக் கல்லாதவர்கள் பலநூல்களைக் கற்றும் அறிவிலரென்றே சொல்லப்படுவார்கள்.

இக்கருத்து நோக்கியே நாயனார் வாக்கு எழுந்ததுபோலும்.

உலகத்தோ டொட்ட ஒழுகல்
பலகற்றுங் கல்லார் அறிவிலாதார்.

ஆதலால் யாவரும் ஒழுக்கத்தை மேற்கொண்டு நடக்கவேண்டும்.

இனி ஒழுக்கத்தைக் கைவிட்டு கெட்டசகவாசம் செய்வதால் அநேகதீமை ஏற்படுகின்றன. அப்படிக்கெட்ட சகவாசத்திலிருந்தால் மெஸ்மரிஷம் முதலியன பழகுவோருக்கு மிகுந்த கெடுதலாகும் ஆகையால் கீழேவரும் ஓர் சிறியகதையால் விளக்கிக் காட்டுவோம்.

# செயற்கைவாசவண.

---

சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன் நெல்லூர் ஜில்லாவின் வடபாகத்தில் லக்ஷ்மணபுரி என்ற ஒருசிறிய ஊருண்டு. அவ்வூரில் உள்ள எல்லாஜனங்களும் உழுதுபயிரிட்டு ஜீவிக்கக்கூடியவர்களே! அவர்களில மிக்க ஏழையும் சொற்பநிலமும் உடைய ரங்கசாமியென்ற கூலியாள் ஒருவனிருந்தான். அவன் தன் ஏழமைக்கேற்ப எல்லா ஜனங்களிடத்தும் அன்பும் மரியாதையுமாக நடந்துகொள்வான் அவன் தன்வாழ்நாளைக் கழிக்க தன்னுயிர்த்தோழியாக தன்னந்தஸ்திற்குத் தக்கபடி முத்தம்மாள் என்னும் ஓர்பெண்ணை விவாஹம் செய்திருந்தான். இவர்கள் நன்ருய் காலம் கழித்துக்கொண்டு வரும்போது தேசங்களும் மிகச்செழிப்பாய் இருந்தது. அதனல் இவர்களுக்கும் மிக்க வெள்ளாண்மை விளைந்து அதிக வருமானம் கிடைத்தது அக்காலத்தில் ரங்கசாமியின் மனைவி கெற்பவதியாகி நல்லசுபதினத்தில் இரண்டு ஆண்குழந்தைகளைப் பெற்ருள் இருவரும் அக்குழந்தைக்கு வேண்டிய சம்ரக்ஷணை செய்து பாதுகார்த்து வந்தார்கள்.

இப்படி வாழ்ந்துவரும்போது மறுவருஷம் அத்தேசத்தில் மழையே பெய்யவில்லை. குடிகள் தங்களிடம் உள்ள நவதானியங்களைப் பெற்றுக் கஷ்டப்பட்டு ஜீவித்தனர். பின்னும் அடுத்தவருஷமும் மழைபெய்யவில்லை. ஜனங்கள் மழையோ மழையென்றுமானம் பார்க்கலானர்கள். வெய்யிலின் கொடுமையோ சொல்லிமுடியாது இப்பஞ்சத்தில் ஏழை ஜனங்கள் பாடு. அதோகதிதான், அநேகர் கைகால் வற்றிப்போய் நடக்கமுடியாமற் கிடந்தனர். அநேகர் பட்டினி கிடந்து செத்தனர். ஆற்றுக்குப்போகுமிடங்களில் தண்ணீரில்லாமல் கூட்டங் கூட்டமாய்ச் செத்துக்கிடந்தனர். குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது வெகுதூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து குடம் ஒருரூபாய்வீதம் விற்ருர்கள். அதில் கொஞ்சம் பிரபுக்களாயுள்ளவர்கள் மாத்திரம் வாங்கினர்கள் ஏழைகளாயுள்ளவர்கள் எங்கு போவார்கள். அதிலும் அன்ருடம் ஜீவனம் பார்த்து வாழும் ரங்கசாமியும் அவன் மனைவியும் பிள்ளைகளும் எங்குபோவார்கள். இனிகொஞ்சநேரமும் இவ்வூரிலிருந்தால் ஜீவிக்கமுடியாது என்

இரண்டு குழந்தைகளையும் ஆளுக்கு ஒன்றாகத்தூக்கிக்கொண்டு காடு வனாந்திரமாக வெகுதூரம் வந்தார்கள். இவர்கள் வெய்யிலில் வெகு தூரம் வனத்தில் சலியாமல் இரண்டுநாள் நடந்தும் கொஞ்சமாவது தண்ணீரகப்படவில்லை என்னசெய்வார்கள் பின்னும் கஷ்டத்தை சகித்துக்கொண்டு வெகுதூரம் தெற்குநோக்கி வந்தார்கள். இடை யில் இவர்கள் கஷ்டம் பாலைவனம் வந்து குறுக்கிட்டது. எங்கும் மணல் வெளியைத் தவிற வேறொன்றும் இவர்களுக்குத் தெரிய வில்லை, அதில் நடுவெயிலில் நடக்கவேண்டிவந்தது. கொஞ்சதூரம் நடந்தார்கள் வெயில் வெப்பம் தாங்காமல் சற்று ஓடினார்கள் பின் தங்கள் ஆடையைக் கீழேபோட்டு அதில் சற்றுநின்றார்கள் இம்மா திரி தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தங்கள் பிள்ளைக்கு யாதொரு கெடுதலும் வராமல் பாதுகாத்துக்கொண்டு போனார் கள். இப்படிக்கஷ்டப்பட்டு மாலைவேளையில் வனமடர்ந்த ஒரு மலை யடிவாரத்தில் வந்துசேர்ந்தார்கள். அங்குவந்து சற்று அயர்ந்து பிள்ளைகளை அணைத்துக்கொண்டு இருவரும் ஆயாசத்தாற் தூங்கி விட்டார்கள்.

அப்போது சற்றுநேரஞ்சென்று ரங்கசாமி தூங்கி எழுந்து பார்க்கும்போது தம்பிள்ளைகளில் ஒன்று தாய்மார்பின்மீது படுத் திருந்து பசியின் அயற்சியால் சிறிதுநேரம்பொருத்து எழுந்து தாயி டம் பால்குடிக்க ஆரம்பித்தது. ஆ! எத்தனையோநாள் பட்டினி கிடந்து வயிறுகட்டிப் பிள்ளைகளைக் காப்பாற்றி எலும்புந்தோலு மாய்ப்போயிருக்கும் அவளிடத்திலே பால் எங்கே யிருக்கிறது உறிஞ்சி உறிஞ்சிப் பார்த்தும் பால் வராமையால் அழ ஆரம்பித் தது. மனைவி வெகுதூரம் நடந்த களைப்பால் விழிக்காமல் தூங்கிக் கொண்டிருக்கிறாள். ரங்கசாமி இந்தகஷ்டத்தைப்பார்க்கச் சகிக்கா மல் தன்னிடத்திலுள்ள பிள்ளையையும் மனைவிபக்கத்தில் கிடத்தி விட்டு வெகுதூரம் ஓடிவிட்டான். இங்கே ரங்கசாமியின் மனைவி தூக்கத்தினின்றும் எழுந்து பார்க்கையில் தன்புருஷனைக் காணாத தால் ஒருக்கால் வேறெங்காவது போயிருப்பாரோவென்று சற்று நேரமிருந்து பார்த்தாள் பின்பு வெகுநேரமாகியும் புருஷனைக் காணோம். மாலை வேளை இருட்டிவிட்டது தீபம்வைக்கும் நேரமாகி யது. இந்த இருட்டில் எங்குபோவாள் கஷ்டப்பட்டுத் தன் பிள்ளை இரண்டையும் இரண்டு பக்கத்திலிடுக்கிக்கொண்டு தள்ளாடி வனத்

தில் நுழைந்து தன்புருஷனைத் தேடிக்கொண்டு போனாள். சிறிது தூரம் போகவும் ஜனசஞ்சாரமில்லாத காட்டில் ஓர் சிறிய வெளிச்சம் தோன்றியது. அவ்வெளிசசத்தின் திக்கை நோக்கிப் போகையில் அது அக்காட்டில் வருபவர்களை அடித்துப் பறிக்கும் திருடனுடைய குடிசையாயிருந்தது. அங்கு போகவும் அக்குடிசையினுள்ளிருந்து வயதுசென்ற திருடன் இவளைக்கண்டு வெளியில் வந்து இவளிருக்கும் நிலைமையைப் பார்த்து அவள் பசிக்காகத் தன்னிடத்திலுள்ள பறவையின் மாமிஸத்தைக் கொடுத்தான். அம் மாமிஸத்தை இவள் கையில்வாங்கித்தின்று அவனாற் கொடுக்கப்பட்ட தண்ணீரை யருந்திவிட்டு அங்கேயே படுத்துக்கொண்டாள். பின் மறுநாளும் அவள் ரெம்ப பலவீனமா யிருப்பதால் தானே அவளுக்கு ஆகாரம் தேடிக்கொடுத்துக்கொண்டு வந்தான். இவன் திருடனாயிருந்தும் கொஞ்சம் பச்சாதாபப்பட்டு அவளுக்கு வேளைக்கு வேளை ஆகாரம் தேடிக்கொடுத்து அவளைப்போஷித்து வந்தான். இப்படி வெகுநாள்ச் சென்றது பையன்களும் பெரியபையன்களாயினான் அப்போது ஒருநாள் திருடன் அவளைத்தொலைத்து விட்டுப் பிள்ளைகளை வைத்துக்கொண்டால் தனக்கு உதவியாக இருக்குமென்று நினைத்து அவளைத் தனியாய் வெகுதூரம் மலைச்சாரலிற் கூட்டிக்கொண்டுபோய் இருட்டும்போது தெரியாமல் திருடன் ஓடிவந்துவிட்டான். இவள் வெகுதூரம் அலைந்து கஷ்டப்பட்டு திசை தெரியாமல் ஒருபட்டணம்போய்ச் சேர்ந்தாள்.

அவ்வூரில் தோட்டங்களுக்குக் கூலியாள்ச் சேர்க்கும் ஒருவன் இவளை ஒப்பந்தம்பேசி தோட்டத்திற்கு வேலைக்குக் கொண்டுபோய் விட்டான். இவள் வேலை செய்யப்போன இடத்தில் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தன் புருஷன் பிரிந்துப்போனதையும் நினைத்து கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தாள். இதைக் கண்டவர்கள், இன்னொருபக்கத்தில் உட்கார்ந்து எப்போதும் அழுதுகொண்டிருக்கும் ஒரு கூலியாளனைக்கொண்டுவந்து அவள்முன் விட்டார்கள். இவர்களிருவரும் ஒருவரையொருவர் சற்று நிதானித்துப் பார்த்ததும் இருவரும் ஆவிச்சேர்த்துக் கட்டிக்கொண்டு அழுதார்கள். அப்படி இவளோடு வந்து சேர்ந்தவனே இவள்புருஷனாகிய அரங்கசாமி அவனும் அநேகயிடங்களில் அலைந்து கடைசியாய் கூலியாளனாய் வேலைசெய்யத் தோட்டத்திற்கு வந்து சேர்ந்

தான். இப்போது இருவரும் ஒருவரையொருவர் க்ஷேமம் விசாரித்துக் கொண்டவுடன் பிள்ளைகளைப் பிரிந்ததைப்பற்றிச் சொல்லி வருத்தப்பட்டாள். பின்பு இவர்கள் ஒப்பந்தப்படி கொஞ்சநாள் வேலைசெய்து தங்கள் ஜென்மதேசம் நோக்கி வந்தார்கள். அங்கு முன்பு கால்மிதிக்க முடியாது நெருப்பாய் எரிக்கும் கொடிய தரையெல்லாம் இப்போது எங்குங் பசும் புட்கள் முளைத்து பஞ்சு மெத்தைப்போலிருந்தன. மரங்கள் நல்லபழங்களைக் குலைகுலையாய்ப் பழுத்துச் சொறிந்தன. முன் தண்ணீரில்லாமல் வரண்டு கிடந்த நீரோடைகளெல்லாம் தண்ணீர் சிலுசிலென்று ஓடிக்கொண்டிருந்தன. இவர்கள் சந்தோஷமாய்ப் போய்க்கொண்டிருக்கையிற் வனத்தினின்றும் ஓர் காட்டுமனிதன் வெளிக்கிளம்பி இவர்களைக் கண்டவுடன் கலலலலலலவென்று ஒருமாதிரி இறைச்சல் போட்டான் இதைக்கேட்டவுடன் இன்னொருபக்கமிருந்து ஒருவனும் வந்தான். இப்படிவந்த இரண்டுபேரும் அவ்வனத்திலுள்ள கள்ளர்களே! அவர்களைக் கண்டவுடனிவர்களிருவருங் கண்டுபயந்துவிட்டார்கள். இவர்களிருவரும் எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் எங்கள் கையிலுள்ளதைத் தந்துவிடுகிறோம் எங்களிடத்தில் வேறு என்ன விருக்கின்றது என்றார்கள். கள்ளர்களிருவரும் இவரிடத்திலுள்ள பொருளைப் பிடுங்கிக்கொண்டு ஒருவனிவர்களை வெட்டிவிடவேண்டுமென்றான் ஒருவன் இல்லை இரண்டுபேரையும் இரண்டுமரத்தில் கட்டிச் சித்திரவதை செய்யவேண்டுமென்று இருவரையும் கத்தக்கத்தத் தனித்தனி மரத்தில் இருக்கக்கட்டி விட்டார்கள். ஒருவன் அங்குள்ள மூங்கில் முள்ளுகளால் மரத்தில் கட்டுண்டிருப்பவன்மேல் அடித்து அதினின்றுவரும் இரத்தத்தைப் பார்த்து அடே! யடே! அன்னே! என்ன சிகப்பாயிருக்கிறதென்று குதித்தான் இன்னொருவன் கட்டுண்டிருப்பவள்மேல் ஏணியின் மீதேறுவதுபோல் தலைவரை ஏறி அங்கிருந்து குதிப்பதுமாயிருந்தான் இப்படி இவர்கள் இம்சைசெய்துகொண் டிருக்கும்போது வனத்தினின்றும் ஓர் கிழவன் வந்தான் அவன் வந்ததும் மரத்தில் கட்டுண்டிருக்கும் முத்தம்மாள் என்பவளைக் கண்டதும் தான் முன் வளர்த்தவளென்றறிந்து இரக்கமுண்டாகி அவளை அக்கட்டினின்றும் விடுவித்துவிட்டு அவள் புருஷனையும் மவிழ்த்து தன்குடிசைக்குக் கூட்டிப் போனான். முத்தம்மாள் அங்குபோனவுடன் தன்பிள்ளைகளைப்பற்றி ஆவலோடு அவர்களெங்கே என்றாள் அதற்குப் பெரியவர் அவர்கள்

இங்கு இல்லை என்றாவது வேறெங்கும் போயிருக்கிறானென்றாவது சொல்லாமல் இவர்கள் முன்பு எமகிங்கரர்கள் போல் நிற்கும் இரண்டு கள்ளரைக் காட்டினார், இதைக்கேட்டவுடன்பெற்றதாயான வளுக்கு எப்படியிருக்கும் நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

பின்பு முத்தம்மாள் தன்பிள்ளை திருட்டில் வல்லபனாகியதைக் குறித்து வருத்தப்படாமல் தான்பெற்ற வாஞ்சையினிமித்தம் அவள் தன்னூருக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று கேட்டாள் பெரியதிருடன் தன்வயோதிககாலத்தில் இந்த இளஞ்சிறுவர்களை விட்டால் நமக்குவேறு துணையில்லையென்றுன்னி உனக்குப் பிள்ளை வேண்டுமானால் புருஷனை விட்டுப்போ புருஷன் வேண்டுமானால் பிள்ளையைவிட்டுப்போ என்று சொன்னான். இவ்விரண்டு வார்த்தைக்கும் ஒன்றும் பதில்சொல்ல தெரியாமல்திகைத்துப் பிள்ளையை விட்டுப்போகவு மனமில்லை புருஷனைவிட்டுப்போகவு மனமில்லாத தால் தானும் தன் புருஷனும் இவ்விடத்திலேயே இருந்துவருகிறோ மென்றாள். அதற்குக் கிழட்டுத்திருடன் மிகுந்த சந்தோஷத்தோடு சம்மதப்பட்டார். இப்படிக்கொஞ்சநாளானவுடன் கிழட்டுத் திருடன் இறந்துபோனான். பின்பு இவர்கள் நாட்டில்வந்து வசிக்கலா மென்றாலும் தன்பிள்ளைகளிருவரும் நாட்டுப் பழக்கந் தெரியாது காட்டுமிராண்டிகளாயிருப்பதையுத்தேசித்துச் சற்று விசனமடைந் தார்கள். பின் பிள்ளைகளை நல்லவழியிற் றிருப்ப மிகுந்தபிரயாசைப் பட்டுத் தினந்தோறும் அவர்கள் முன்பு வானத்தைநோக்கி ஆ! கடவுளே! எங்கள் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக்கி அவைகளின் கெட்டகுணங்களை நீக்கி ரக்ஷித்தருளுமென்று கடவுளை நோக்கிச் செபம் பண்ணிவந்தார்கள். பின் அதைப் பார்த்து அப்பிள்ளைகளும் செபம்செய்யப் பழகினார்கள் கடைசியில் அவர்களுக்கு நல்ல அறிவு வந்து தெய்வத்தை வணங்கப்பழகிக் கொண்டனர். இனி வனத்தி லிருப்பது பிரயோசனமில்லை யென்று அங்கு திருடனால் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பொருளனைத்தையு மெடுத்துக்கொண்டு தன் சொந்ததேசம்வந்து நன்றாய் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள். இக் கதையினால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தென்னவென்றால் தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில் என்றபடி சிறுசிலிருந்துகெட்ட

பழக்கம் மனிதர்க்குள் பரவிவிடுகிறபடியால் அக்கெட்ட பழக்கத்தை அடியோடு நீக்குவதற்கு தெய்வபக்தி அவசியம் நமக்குச் சாவகாசமான வேளையெல்லாம்; கடவுளைத் தியானிக்கவேண்டும்.

---

## கடவுளடியைக் கனவிலும் மறவாதே.

---

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார். என்றபடி.

அன்புநிறைந்துள்ள இன்பச்சோதர சகோதரிகளே! எல்லாம் வல்ல கடவுளின் நாமத்தைச் சொல்லாநின்ற; இச்சிறிய வசனத்திற்கு சற்றே செவிகொடுங்கள்.

சர்வஜீவ தயாபரக்கடவுள் தம்மை வணங்கும்படியாகவே! நம்மை மிருகசென்மமுதல், ஏனய சென்மத்தினின்றும் மேலான சென்மமாகிய மனுஷ்ய சென்மத்தை அளித்திருக்கின்றார். இதுவே நம்பிறவியைக் கடக்கும் பெருஞ்சென்மமாக இருக்கிறது. (இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ) யென்னும் விதிக்கிப் பயந்து இப்பிறவியில் நின்றே நம் பிறவிக்கடலைக் கடப்பதர்க்கு ஒர் பெருந்தோணி தேடிக்கொள்ளல் வேண்டும். அக்கடலைக் கடப்பதர்க்கு தோணி யெங்கே அகப்படும்? என்று சிந்திக்கவேண்டாம். அத்தோணி யோட்டுகிறவர் நம்மை அனுதினமும் அழைக்கின்றார்! நாம் தாம் பராமுகமா யிருக்கிறோம். அத்தோணி யோட்டுகிறவர் யாவர்! நம்மை யெப்படி அழைக்கிறாரென்று பார்த்தால் அவர் நம்மை நேரில் அழைப்பதுமல்லாமல் அவருக்கு உரித்தானவர் மூலமாயு மழைக்கிறார். அப்படி அழைப்பவர் யாவர்? அவருக்கு உரித்தானவர் யாவர்? என்று சற்றே கவனிப்போமாகில் எல்லாம் வல்ல கடவுளே தோணியோட்டுகிறவராயும், அவரே நம்மை நேரில் அழைக்கிறவராயுமிருக்கின்றார். எப்படி அழைக்கின்றார் என்றுபார்த்தால் கடவுளால் சொல்லப்பட்ட வேதத்தில் நீங்கள் எல்லோரும் யென்னைச் சிந்தியுங்கள் தங்கள் தங்கள் விக்கிரகவிதிப்படி யென்னை விரும்புங்கள். அப்படி விரும்புவதிலும், சிந்திப்பதிலும், தங்கள் தங்

கள் முழுமனதையும் நாட்டுங்கள், அதினிடத்தினின்றும், நான் வெளிவந்து தங்களை பாதுகாப்பேன் என்று சபதங் கூறியிருக்கிறார். எனது அரிய நேயர்காள்! அதன்படி நடந்த இரண்டு விஷயத்தை இதனிடத்தே உங்களுக்கு ஆசர்ப்படுத்துகிறேன். சற்றே கவனி யுங்கள்!

அன்னாளிலே தன்னேரிலா மன்னவனாகி செங்கோலோச்சி திரிமூர்த்திகளும் தன்பெயர் சொல்ல வாழ்ந்துவந்த இரணியனென் னும் இராட்சசனுக்கு பரிபக்குவங்களில் சிறந்து, பகவனுமர்த்தை இடைவிடாது பாசித்துவரும் பிரகலாதனன் என்னும் ஒரு அரிய புதல்வன் செனித்தான். அன்னவன் தானே தெய்வமென தற்பெரு மைகொண்டிருந்த தந்தைக்கி, சிற்சில ஞாயங்களை யெடுத்துக்காட்டி கடவுள் ஒருவர் உளர், அவரே யெல்லாம் வல்லவர், அண்ட பிண்ட சராசர மனைத்திலும் நிறைந்தவர். அத்தகைய கடவுளை யடைய விரும்பினல் நித்தியானந்தத்தில் நிலைத்திருக்கலாம் எனக்கூறினன். அதைக்கேட்ட இரணியன் நகைத்து குழந்தாய் விஷயந்தெரியாது வினவினய் நீ! சொல்லுங் கடவுளாகிய திரிமூர்த்திகள் என்னமமே சொல்லி வாழுகின்றார்கள். அதையரியாது அறைந்து விட்டாய் ஆகிலும் நீ என்னை மதியாதுசொன்ன மாற்றத்திற்கு மனதில் சஞ் சலமுறேன்.

மக்கள் மெய்தீண்டல் உடல்க்கின்பம்
மற்றவர் சொல்க்கேட்ட லின்பம் செவிக்கி.

என்னும் வாக்கியத்திற்கிணங்க நீ சொல்லியது புன்சொல்லா கினும், நன்சொல்லாக மதித்து மகிழ்ந்தேன். ஆசைப் புதல்வா? இனி, இப்படி வசனம் புகலாதே! என்னை யல்லாது தெய்வம் ஒன்றுண்டென மதியாதே யென மறுத்தான் இரணியன். பின் னும் பிரகலாதனன் நகைத்து "கெடுவான் கேடுநினைப்பான்" என் னும் விஷயத்தையுள்கொண்டு, தந்தாய்! சிந்தையில் பதித்துப்பார் நீர்சொல்லுவது விந்தையா யிருக்கிறது! நானே கடவுளென தற் பெருமை கொண்டால் நற்கதியடையமாட்டாய், என நவில இரணிய னுக்குக் கோபம் பிறந்து அடா! சிற்றறிவுடையவனே! நீ சொல் லுங் கடவுள் இருக்குமிடம் எங்கே! காட்டுவாயானல் இப்போதே சென்று உன்பார்வைக்கு நேரில் அவனுயிரைப் பிரிக்கின்றேன்,

அப்படி நீ காட்டாதுபோனால், என்கைவாளால் உன் சிரத்தைக் கொய்வேனெனக் கூறினான். பிரகலாதனன் புன்னகையோடும் தந்தாய் கடவுளை, இக்கண்ணால் காட்டுவது எங்ஙனம். அவர் இல்லாவிடம் ஒன்றுளவோவென இப்பாடலின் விஷயத்தை சாற்றினான்.

சாணினுமுளனோர்தன்மை யணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக் குன்றினுமுளனிங்நின்ற
தூணினுமுளன்முன்சொன்ன சொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகன்சொன்னான்.

(இராமாயணம்.)

உடனே இரணியன் சிரித்து குழந்தாய், நீ மிக்க நல்லவன். அக்கடவுளைக்காண யென்னை வேறு இடத்திற்குச் செல்ல ஒட்டாமல் இத்தூணிலுமிருப்பதாக வசனித்தாய். அப்படி இல்லையேல் உன்னைக் கொல்வதில் ஐயமில்லையென அகங்காரத்தோடு யெதிரே நின்ற தூணில் தன் அகண்ட கறங்களை மடக்கித் தாக்கினான். அதினின்றும் பிரகலாதனன் பக்திக்கிணங்கி பரமதயாளுவாகிய ஸ்ரீமந் நாராயணன் நரசிம்ம ரூபத்தோடு அவதரித்து இரணியனைச் சங்கரித்து பிரகலாதனனுக்குக் காட்சி கொடுத்ததாக கனகபுராணங் காட்டுகின்றன.

தவிரவும் பண்டயகாலத்தில் மிருகண்டமகரிஷியின் புதல்வனாகிய மார்கண்டன் தனக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட பதினாறு வயதைமாற்றி மேற்பட்டும் வாழ்வதற்குக் கருணையின் கடலாகிய ஈஸ்வரனை நோக்கித் தவம்செய்ய அன்னவனுக்கு வயது பதினாறு முடிந்தவுடன் எமதர்மன் தூதர்களை யனுப்பி மார்க்கண்டன் உயிரை கவர்ந்துவர அன்னவர்களுக்கு முடியாமையால் தானே சென்று தன் பாசவலையைவீச மார்க்கண்டன் பயந்து முழுமனதோடும் தான் பூசைசெய்த மணல் குவியலென்னுஞ் சிவலிங்கத்தை சேர்த்துக்கட்டினான். இவனுடைய முழுபக்திக்கிறங்கி பகவான் அதனிடமிருந்தும் வெளியாகி, எமனைச் சங்கரித்து மார்க்கண்டனுக்கு என்றும் பதினாறுவயதென வரமளித்து மறைந்தாரென பக்தவிஷயங்களால்நமக்கு வெள்ளிடைமலைபோல்விளங்கக்காட்டுகின்றன. மேலே சொல்லிய இரண்டு பக்தவிஷயத்தின் மூலமாய் எல்லாம், வல்ல கட

வுள் நம் பக்திக்கித் தக்கவாறு பலன் அளிப்பாரெனக் காட்டுகின்றது.

இன்னும் அந்த ஈஸ்பரனுக்கு உரித்தானவர், மூலமாயும்நம்மை அவர்பதமடைய, அழைப்பதாயுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவருக்கு உரித்தானவர் யாவர் என்று கவனிப்போமாகில் அப்படி அவருக்கு உரித்தானவர் மகான்களே! அவர்களால் நமக்கு யெழுதியனுப்பிய செய்தி பலவிருக்கிறது. அச்செய்தி யென்னவென்றால் நீங்கள் யெல்லோருங் கடவுளைச் சேரவாருங்கள், அக்கடவுளைக் காண்பதற்குவழி யெங்கள் கடிதத்தைப் பாருங்கள். அதில் சரியாய் சொல்லப்பட் டிருக்கிறதென்று நமக்கு செய்தி யெழுதியனுப்பியிருக்கிறார்கள். அச்செய்தி நமக்கு அகப்படவில்லையேயெனச்சிந்திக்க வேண்டாம். நம் சமயபோதகர்களாகியபெரியோர்கள் நமக்காக யெழுதிவைத்திருக்கும் தேவார திருவாசக முதலிய பல நூல்களையும் பார்த்தால் அதில் கடவுளைத் துதித்து அவரைப் பின்பற்றுவதற்கு மார்க்கம் சொல்லப்பட்டிருக்கிறது.

(சிவவாக்கியர்.)

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச்சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்பரிடத்திலு மீசனிருப்பதல்லால்
கல்லிலுஞ் செம்பிலுமா யிருப்பானெங்கள் கண்ணுதலே.

என்னும் நீதிக்கிணங்க வேதச்சுருதிகளிடத்தும் ஈசன் இருப்பானென காண்கின்றோம். ஆகையால் அன்பு நிறைந்துள்ள நண்பர்காள்! கடவுள் பதத்தை அடைவதற்கு இவ்வளவு வெளிப்படையாய் சொல்லியிருக்கும் புராண காவியங்களையும் தேவார திருவாசக முதல் கடவுள் நாமத்தைச் காட்டும் பல நூல்களையும் நாம் பார்ப்பது மல்லாமல் நம் அரிய சிறிய குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுப்போமானால், அந்தக்கல்யாணகுணமுடையஈஸ்வரன் மகிமையேன் நமக்குப் பாலிக்கமாட்டாது. கட்டாயம் நமக்குக்கைகொடுக்கும். நம் அவ்வைப்பிராட்டியாரவர்கள் சொல்லிய நீதியைப் பாருங்கள். கடவுளை நம்பினோர் கைவிடப்படாரென ரெம்பத்திட்டமாய் எழுதிவைத்திருக்கிறார்கள். அத்தகைய பெருமை வாய்ந்த அம்மையார்கள் அறிவில் சிறந்தவர்களல்லவா! அவர்கள் வாக்கைநாம்

பொய்யென மதிக்கலாமா? சிறிது கவனித்து, கடவுள் நாமத்தை சதாவுந்துதிக்கவேண்டுமென, நாம் யெல்லோரும் நினைத்து அதற்கு ஏதுவாகிய சாதுக்கள் நிறைந்துள்ள சபையில்சென்று பகவனுமத்தைப்பாடி, பரமானந்தமடையுமாறு நித்திய கல்யாண குணமுடைய ஈஸ்பரனைப் பிரார்த்திக்கின்றேன்.

## ஜீவகாருண்யம்.

நாம் எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யமாக நடந்துக்கொள்வதே மிக்க நல்லது, அதுவே தெய்வத்திற்கும் ஏற்றது, சிலர் தங்கள் கெட்டபழக்கத்தால் சிறிய பிராணிகளைப் பிடித்து இம்சை செய்து வதைக்கின்றனர். அது முற்றிலும் பிசகு, நாம் மற்றொரு ஜீவனை இம்சை செய்வதுபோல் நம்மை ஒருவர் இம்சை செய்தால் நாம் என்ன சும்மா இருப்போமா? எப்படியேனும் அத்துன்பத்தினின்றும் தப்பித்துக்கொள்ள எத்தனிப்போமல்லவா? இதுபோல வேற்றப் பிராணிகளுக்கும் நோவுண்டாக்கும்போது எப்படியேனும் தப்பிக்க முயலுமல்லவா? சிலர் தங்கள் வீட்டுகளில் மைனு கிளிமுதலிய பட்சிகளைக்கொண்டுவந்து கூண்டிலடைத்து அதற்கு வேளைக்கு வேளை பழம் முதலியன கொடுத்துவளர்த்து வருகிறார்கள். அதுவும் கெட்டகாரியமே; அவைகளுக்கு நாம் என்னதான் தீனிகொடுத்தாலும் அவைதாமே காட்டில் திரிவதுபோல் சந்தோஷமாயிருக்குமா? நம்மை ஒரு அறையில் அடைத்து வேளைக்கு வேளை நல்ல சாப்பாடுமட்டும் போட்டுவந்தால் திருப்தியா யிருப்போமா? இஷ்டம்போல் ஓடியாடித்திரியும் ஒருவனைப் பிடித்துச் சிறையில் அடைத்தமாதிரி அடைத்துவிட்டால் சும்மா இருப்பானே? இருக்கமாட்டானல்லவா இதுபோல் வனத்தில் இஷ்டம்போல் சஞ்சரிக்கும் பட்சிகளை அல்லது மிருகங்களைப் பிடித்து வளர்ப்பது அவைகளின் மனம்போல் எங்கு முலாவி வருவதற்கில்லாதபடி நாம் செய்வதால் அவை தானிருந்த காட்டை நினைத்து நினைத்து சதா ஏக்கமுற்றுச் செத்துப்போகின்றன.

ஆதலால் நாம் ஒவ்வொருவரும் பட்சிகளையாவது மிருகங்களையாவது பிடித்து வளர்க்கும் செய்கைகளை விட்டு விடுவோமாக, இன்

னும் சில துஷ்டப் பிள்ளைகள் அணில் குருவி ஓணான் முதலிய சிறு பிராணிகளைப் பிடித்து கயிற்றில்கட்டி விளையாடுகின்றனர். அவை முழுதும் தப்பிதமே? இந்த துஷ்டப் பிள்ளைகள் சிறிய பிராணிகளைப் பிடித்து, இம்சைசெய்து,அவை துன்பப்படுவதைப்பார்த்து சந்தோஷப்படுவது, "எலிக்குமரணம் பூனைக்குக் கொண்டாட்டம் என்பதுபோல" அந்தப் பிராணிகள்படும் துன்பத்தைப் பாராது இந்தத்துஷ்டப்பிள்ளைகள்சந்தோஷப்படுகின்றனர். இப்பேர்ப்பட்ட எளியபிராணிகள் தான், என்ன செய்யும், தன்பிராணனைத் தப்பித்துக்கொள்ளப் பலபாகமும் ஓடித்தத்தளிக்கும் அதைக்கண்ட துஷ்டப்பிள்ளைகள் அவ்விதக்கஷ்டத்தைப் பாராது அது விளையாடுகிறது என்று சந்தோஷமாய் கையைக் கொட்டிக்கொட்டி சிரிக்கின்றனர். இதற்கென்செய்கிறது ஐயோ! பரிதாபம், இந்த நிலைமையில் பிராணிகளுக்குப் பேசும் சக்தியைக் கொடுக்கவில்லையே! அத்துன்பத்தைச் சகிக்காது தன்மெல்லியகுரலால் அவ்வவ கீச்சுக் கீச்சென்ன கத்துகின்றன. அப்போதும் அதை ஒருவரும் கவனிப்பது கிடையாது. இனியேனும் சிறுபிள்ளைகள் சிறியபிராணிகளை இம்சை செய்யாதபடி தடுத்து நல்லவசனத்தைப் போதித்து வருவோமாகுக.

"ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்னினிதே" சிலர்தங்கள் திரேகம் நன்றாயிருக்கும் பொருட்டு பறவை மிருகம் முதலிய மாமிஷங்களைத் தின்றுவருகின்றனர். அதுவும் மிக்கக் கெடுதலே உலகத்தில் மனிதன் தான் வந்தது எதற்காகவென்று சிறிதும் சிந்திப்பதேயில்லை, ஆத்ம இரக்ஷிப்படையவே! நாம் ஒவ்வொருவரும் இப்பூவுலகில் மனிதவதாரமாகப் பிறந்தது. ஆத்ம இரக்ஷிப்பேமுக்கியகருத்து, தேகத்தைப் பார்க்கிலும் ஆத்துமாவே விலையேறப் பெற்றது. தேகம் அநித்தியம், ஆத்துமாவோ நித்தியமுள்ளது. அப்படியிருப்பினும் நாம் இப்பிரபஞ்சவாழ்வையும், சுகத்தையும், அனுபவிக்க எவ்வளவோ கஷ்டமும், கவலையுமாய், இராப்பகல் உழைக்கிறோம். நீடூழிகால வாழ்வை யளிக்கும் ஆத்தும ஈடேற்றத்தைப் பற்றி நாம் விசாரிப்பதும், இதில் துலங்கிய உண்மையை அநுசரிப்பதும் எவ்வளவோ சொற்பம். மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? எல்லா ஞானத்திலும் ஆத்துமஞானமே

சிறந்தது அந்தஞானம் முக்தியளிக்குமென மனுதர்மமும் சொல்லுகிறது.

"கடவுளை யறிவதே மெய்ஞானம்
பாவபட்சாதாபமே மெய்யுணர்ச்சி"

அரூபியாகிய கடவுளிடத்து பக்திகொள்வதே நித்தியஜீவன், அப்பக்தியினால் திவ்விய அருள் பெற்றுத் திரிகரண சுத்தியாய் ஜீவிப்பதே முக்திமார்க்கம்.

ஆதலால், நாம் ஒவ்வொருவரும், நம் ஆத்துமாஈடேறவேண்டி மிகுந்த பாடுபடவேண்டும். அவற்றிற்கு நாம் எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யமாய் நடந்துகொள்ளவேண்டும்நாம், மற்றப்பிராணிகள்மீது அன்புபாராட்டினால்தான், கடவுளும நம்மீது அன்புபாராட்டுவார். மேலும் கிடைத்தற்கரிதாகிய இம்மானிட ஜென்மத்திலிருந்து நாம் முன்னேறுவதற்கு வேண்டிய நற்காரியங்களைச் செய்யாதுஇன்னும் இழிஜென்மமாகப்பிறக்கிறதா! நாம் இதிலிருந்து சதா நல்லொழுக்கத்தைப்பற்றி தெய்வத்தன்மை பொருந்திவிளங்க வேண்டியதிருக்க, அதைவிட்டு இன்னும் பிராணிகளைக்கொன்று அவைகளின் ஊனைத்தின்று உடலை வளர்த்துக்கொண்டிருந்தால் எப்போது நாமீடேற்றமாகிறது.

இக்காலம் ஒருவரைநாம் கொலைசெய்து விட்டால் நம்மை உடனே இராஜாங்கத்தார் பதிலுக்குக் கொலைசெய்து விடுகிறார்கள். அத்தன்மைபோல் நாம் இப்போது பட்சி மிருகம் முதலிய பிராணிகளைக் கொல்வதினிமித்தம் கடவுளும் நம்மைப் பதிலுக்குத் தண்டிக்காமல் விடார். பெற்றபிள்ளையானாலும் குற்றம் செய்த பிள்ளையைக் கட்டாயம் தாய்தகப்பன் தண்டிப்பதுபோல, நாமும் என்றைக்கு மிருகம் பட்சி முதலியவற்றை கொலைசெய்தோமோ அன்றிருந்து நாமும் பதிலுக்குத் தண்டனையடையாமற் போவதில்லை. இக்காரணம்பற்றியே "முற்பகல்செய்யில் பிற்பகல்விளையும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலர் மிருகம், பட்சி, முதலியவை மனிதனுக்காக ஏற்பட்டது. ஆதலால் அவைகளை மனிதன் எப்படியும் தின்னலாமென்று சொல்கின்றனர். அது முழுவதும் தப்பான அபிப்பிராயமே. மனிதன் பலவிதத் துன்பங்களினின்றும், இன்ப

மாய் வாழ்வதற்காகவே மற்ற மிருகம் பட்சி முதலியன படைக்கப் பட்டிருக்கின்றன.

மனிதனாகிய நாம் குளிர், உஷ்ணம், வியாதி, பலவீனம் முதலியனவின்றி சமரசமாய் வாழும்பொருட்டு மனிதனுக்கு உதவியாக பலவித ஜீவன்களைப் படைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுக்குப் பால் முதலியன கொடுப்பதற்கு ஆடுமாடுகளையும் ஆட்டின்ரோமம் கம்பளியாக மனிதனுக்கு உண்டாகும் சீதளத்தை நீக்குவதற்காகவும் குதிரை, ஒட்டகம், யானை முதலியன வாகனாதிகள்ளாகவும் புரா, கிளி, மைனா, கோழி, வாத்து, குருவி, காகம் முதலிய பட்சிகள் மனிதன்வாழும் குடிசையில் அரிசிமுதலிய தானிய மணிகளும், புழு, பூச்சி முதலிய ஊர்வனங்களும், சிதறி அசுத்தப்படுத்தா வண்ணம் அப்போதைக்கப்போது சுத்தம் செய்கின்றன. இன்னும் வீட்டுப் புரம்பே அழுகிக்கிடக்கும் செத்த பிராணிகளை பருந்து காகம் முதலியயன நமக்கு உற்ற தோட்டிபோல் அவைகளைத் தூக்கிக்கொண்டு போய் தின்று நம்மில்லத்தைச்சுத்தி கரிக்கின்றன. இன்னும் சிறு தெள்ளுப்பூச்சிகள் ஏதேனும் பண்டங்களில் விழுந்து அசுசியாக்கா வண்ணம் அதுகளைப்பிடித்துப்பல்லி தின்னவும், பல்லி அளவுக்கு மிஞ்சாவண்ணம் எலியையும், எலி அளவுக்குமிஞ்சாவண்ணம் பூனைகளும், அநேக குடிசைகளிலிருக்கின்றன. இவையெல்லாம் நாம் சுக ஜீவியாய் வாழும்பொருட்டே! நாம் சுத்த ஆகாரமே உட்கொள்ளும்படி கெட்ட ஆகாயங்கள் மிருகங்கள்ளாலும், மரங்களாலும், வெய்யிலாலும், நல்ல காற்றாலும், சுத்திகரிக்கப்படுகின்றன.

இப்படி நம் ஜீவனைக் காப்பாற்றவே நம் கண்முன்பு அநேக பிராணிகளைக் கடவுள்படைத்திருக்கின்றனர். இன்னும் நாம்அற்பப் பிராணியென்று யெண்ணும் சிற்றெறும்பைப் பாருங்கள் அவை தன்மெல்லிய கரங்களால் தாவித்தாவி ஓடி வாழ்நாளைக்கு வேண்டிய ஆகாரங்களை தேடுவது என்னவிந்தை! அவைகளுக்கு மழை வருவது தெரிந்ததும் தான் விரைந்து விரைந்துசென்று இரை சேர்ப்பது என்ன ஆச்சரியம் இவை நமக்கு நல்லபுத்தி போதிக்கின்றதல்லவா? என்னைப்போல் நீங்களும் சுருசுருப்பாய் இருங்கள் என்று சொல்வதுபோலிருக்கிறதல்லவா? இன்னும் சிங்கம், புலி, பாம்பு, தேள், பூரான், நட்டுவாக்காலி முதலியன, தெய்வம் உண்டு என்று போதிப்பதற்குறிய போதகர்களைப்போ லிருக்கின்றன.

தெய்வமில்லையென்று சாதிக்கும் எந்த நாஸ்திகனும் கொடிய போதகர்களாகிய பாம்பு, தேள், சிங்கம், புலி முதலியவற்றில் அகப்பட்டவுடன் ஆ! தெய்வமே! என்னைக் காப்பாற்றக்கூடாதா வென்று வாய்விட்டுப் புலம்புவதை நாம் எத்தனையோ தடவை பார்த்துங் கேட்டுமிருப்போம். இனி இத்தகைய பிராணிகளெல்லாம் நமக்குண்டாகிற துன்பத்தினின்றும் நாம் நீங்கிச் சுகமாய் வாழும்பொருட்டு நமக்குப் பலவித உதவிகளாகவும் நமக்கு உற்ற துணைவனுகவும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

176366

ஆகையால் அவை யெல்லாம் நாம் தின்னுவதற்காக ஏற்பட்டது யென்று சொல்லக்கூடாது நமக்குச் சாப்பிடுவதற்குப் போதுமான தானியவகைகளும் கிழங்குகளும் பால் நெய் முதலியவைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இதைவிட்டு என் தொட்டகையும் வீடும் நாற்றமெடுக்கும் புலாலை யுண்ணவேண்டும் இன்னும் ஒருசமையத்தார் மற்றப் பிராணிகளெல்லாம் ஓரறிவுமுதல் நான்கறிவுடையது மனிதன் ஆறறிவுடையவனுதலால் பிராணிகளைத் தின்னலாமென்று சொல்கின்றனர். அவர்கள் எண்ணுகிறபடி பிராணிகளுக்கு ஓரறிவு ஆதலால் தின்னலாமென்று யெண்ணக்கூடாது. அவைகளையும் கட்டாயம் சோதித்துப்பார்த்தால் அவைகளுக்கும் நம்மைப்போல் எல்லா அவயவங்களும் இருக்கின்றன. அவைகளுக்கும் நம்மைப் போல் அறிவுகளுமிருக்கின்றன. நாம் துன்பத்தைக்கண்டு வருத்தப் படுவதுபோல அவைகளும் வருத்தப்படுகின்றன. நாமும் பிராணி ஜென்மமெடுத்துப் பார்த்தோமானுல் அவ்வுண்மைவிளங்கும். ஆகையால், ஒருஜீவவதைகளும் செய்யாது, நம்திருக்கைகளையும், மனதையும், மிகப்பரிசுத்தமாக வைத்திருப்போமாக, சிலர் மனிதன் மாமிசம் புசிக்காதுபோனுல் அவன் நல்ல புஷ்டியாகமாட்டானென்று சொல்கின்றனர். நம் நாட்டில் மாமிசம் உண்ணுதவர்கள் நல்ல புஷ்டியாயிருக்கிறதில்லையா! நல்லடீலக்ரசாலியாகவும் இருக்கிறதில்லையா மாமிசம் உண்பதினுலேயே மனிதன் பலசாலியாய் ஆவானென்பது சரியானதல்ல. இவையெல்லாம் ஒருவித வழக்கத்தால் வந்ததேயன்றி வேறல்ல நம்திரேக இயற்கைக்கு மாமிசம் சரியானதல்லவென்றே அநேக டாக்டர்களின் அபிப்பிராயம். மேலும் மாமிசம்

உண்பதில் சிலர் அளவுக்குமீறி அருந்துவதால் அவை திரேகத்தில் பலவித வியாதிகளை உண்டாக்குகின்றன. சிலர் அவை சீக்கிரம் ஜீரணிக்கவேண்டுமென்று லாகிரி வஸ்துக்களைச் சாப்பிடுவதுமுண்டு இவையெல்லாம் என்னத்திற்கு "இரும்பு கடப்பாறையை விழுங்கி விட்டு சுக்குகியாழம்" போட்டு சாப்பிட்டமாதிரி செய்கின்றனர்.

இவை யென்னத்திற்கு, இலேசாய் ஜீரணிக்கத் தகுந்த காய் கனிகளைச் சாப்பிட்டு உடம்பை வளர்க்கக்கூடாதா? மேலும் நாம் தெய்வத்தை வணங்கவேண்டுமானால் நம் மனமும், நம் நடக்கையும் மிகப் பரிசுத்தமா யிருக்கவேண்டும். நம் மனம் மிகச்சுத்தமாகவும் சாந்தமாகவும் இருக்கவேண்டுமானால் நாம் லேசான ஆகாரமே அருந்தவேண்டும். அப்போதுதான் நம் மனம் அக்கம்பக்கத்திற் செல்லாமல் தெய்வத்தினிடத்தே செலுத்த மிக்க சாந்தமாயிருக்கும். நாம் மாமிசம் புசித்துவருவோமானால் நம் மனம் சுயேச்சையாய் கட்டுக்கடங்காக் காளைபோல் விரைவாய் ஓடும். நம்மிஷ்டம் போல் மனதை வசப்படுத்தமுடியாது. இன்னும் அநேக வியாதியும் இதனால் உண்டாவதால் அவசியம் மாமிசம் உண்பதை நிறுத்திவிட்டு சதா மெல்லிய ஆகாரமருந்தி என்றும் அழியாவஸ்துவாகிய அரூபியான கடவுளைப்பின்பற்ற முயற்சிசெய்வோமாக.

நண்பா! காலம் கழிகின்றது, காலன் சமீபிக்கின்றான்! ஏலுமானதை இப்போழுதேசெய்.

# விஷநிவர்த்தி

## அல்லது

# மானஷவைத்தியம்.

நண்பர்காள்! நம்நாட்டில், அநேக வைத்தியசாஸ்திரம் வெளி வந்திருந்தபோதிலும் அவைகளிலெல்லாம் நாம், கண்டும், கேட்டு மிராத அநேகவிதமான மூலிகைகளாலும், பச்சிலைகளாலும், உலோ கங்களாலும், வீரம், பூரம், ரசம் என்பதைச் சேர்ந்த நவபாஷா ணங்களாலுமே வைத்தியஞ் செய்யும்படி ஏற்படுத்தியிருக்கின்றனர். அவைகளெல்லாம் பெரும்பாலும், சிறுபிள்ளைமுதல் வைத்திய ரிடத்தில் சிஷனுயமர்ந்திருந்து கற்றுத்தெளிந்தோரே செய்யத்தக் கதா யமைந்திருக்கிறதே யொழிய சாதாரண ஜனங்களுக்கு சிறி தும் பயன்படாமலிருக்கின்றன. அப்படியே யாரேனும், இரண் டொரு முறைதெரிந்து செய்தபோதிலும், அவை சரியான பக்குவ மாகாமல், அதைச்சாப்பிடும் வியாதியஸ்தனுக்குக் கையைக்காலே முடக்கி, முக்கால் வியாதியை முழுவியாதியாக்கி விடுகின்றன.

ஆனல் எங்கள் மானஷவைத்தியமோ? அப்படியல்ல இவை **(Physiology.)** என்னும் மானிட இயற்கைக் குணத்தை யறிந்து அவர்களுக்கு இன்ன, இன்ன இடத்தில் இன்னவியாதிவரும் என் பதை யறிந்து மனிதன் இன்னவியாதியால் **(Symptom.)** என்னும் பலவீனஸ்திதிக்கு வருவானெனக்கண்டு, அவை ஒவ்வொன்றிற்கும் சரியான இடத்தைக் குறிப்பிட்டுக்காட்டி அவைகளுக்கு மருந் தின்றி, மனதாலும், நம் அவயவங்களாலும் யாதொரு வலியுமின் றிச் சிகிச்சைசெய்யும் வழியை விஸ்தரித்து எழுதப்பட்டிருக்கும், "மானஷவைத்தியம்" என்ற புஷ்தகத்தில் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். அவைசீக்கிரம் வெளிவரும்.

இப்போது அதின்கண்ணுள்ள ஓர் சிறிய வைத்தியமும் மானி டர்களுக்கு அதனல் முக்கிய நன்மையுமளிக்கக்கூடியதுமான தேள் கடி வைத்தியத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

1. இனி இதில் காணும் ஒவ்வொரு விஷயங்களையும் நன்ருய் படித்து மனதில் வைத்துக்கொண்டு தனக்கேனும் பிறர்க்கேனும் விஷந்தீண்டிவிட்டால் சொஸ்தம் செய்துக்கொள்ளவும்.

2. நம் திரேகத்தில் இயற்கையாகவே ஓர்வித காந்த சக்தி அமையப்பெற்றிருக்கின்றன. உதாரணமாக, பட்டுத் துண்டிலும், கண்ணுடிக் குழாயிலும், யாதொரு சக்தியும் தோன்ருதபோதிலும் அவ்விரண்டு வஸ்துவையும் ஒன்ருேடொன்று சேர்த்து விடாது தேய்க்கும் பக்ஷத்தில் அதிலிருந்து ஓர்வித காந்தசக்தி யுண்டாகி, அதனருகே கொண்டுபோகப்பட்ட பஞ்சு காகிதம் முதலியவற்றைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளுகின்றன. முதலில் நம் பார்வைக்கு ஒன்றும் தோன்ருத கண்ணுடிக்குழாயிலும், பட்டுத்துண்டிலும், எவ்வாறு காந்தசக்தி யுண்டாகி பஞ்சு, காகிதம் முதலியவற்றைத் தன்னிடம் இழுக்கும் சக்தியுண்டாகின்றதோ, அம்மாதிரியே, நம், மானிட தேகத்திலும், கடவுளால் அமைக்கப்பெற்ற ஓர்வித காந்தசக்தியுண்டு. அதற்கே! மனுஷியகாந்தமென்று பெயர். அதை விர்த்திசெய்தவுடன் நம் திரேகத்தினின்றும் வெளியேறி மற்ருேர் திரேகத்திற்குள் பாய்ந்து அவர்களை நம்மிஷ்டம்போல் ஆடவும், பாடவும், தூங்கவும், சிரிக்கவும், அழவும் செய்கின்றன. இவ்வித காந்தசக்தியி னுதவியைக்கொண்டே பிறர்க்குண்டாகும் எவ்வித வியாதிகளையும் சொஸ்தம்செய்வதுண்டு.

3. இப்போது நாம் சொல்லவேண்டியது விஷ நிவர்த்திக்கானபடியால் இனி அதைப்பற்றிக் கவனிப்போம்.

4. அநேகர் சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென, தேள் முதலியன கொட்டி வருந்துவதை நாம் நேரில் கண்டும், கேட்டு மிருக்கிருேம், அப்படிக் கஷ்டப்படும்வேளையில் ஐயோ! இப்பேர்ப்பட்ட விஷத்திற்கு ஏதேனும் மருந்தில்லையா, அல்லது மந்திரமில்லையா, என்று பரிதவிப்பதுண்டு. சிலர் தேள் கடிக்கு மருந்துமில்லை தேவடியாளுக்குப் புருஷனுமில்லை. என்று சொல்வதுண்டு, தேவடியாளுக்கு அந்தரங்கத்தில் புருஷனிருப்பதுவும் உண்டு அஃதேபோல் தேள்கடிக்கும் ஓர் உண்மையான

மருந்து அந்தரங்கத்தில் உண்டு. அவ்வுண்மையான மருந்தே மனுஷிய காந்தமென்று பெயர்.

## இனி அக்காந்த சக்தியை உபயோகிக்கும் விதத்தைச் சொல்லுவோம்.

5. விஷந்தீண்டல் அதாவது தேள், நட்டுவக்காலி, பூரான், முதலியன தீண்டி கஷ்டப்படுவோரை எதிரில்உட்காரவைத்து,நாம் அவருக்கு முன்பாக உட்கார்ந்துகொள்ளவும் முதலில்கடித்த இடத்தைக்காட்டச்சொல்லித்திட்டமாய்த் தெரிந்துகொள்ளவும் அதற்குமேல் ஏதேனும் கட்டுகள் கட்டியிருந்தால் அதையும் அவிழ்த்துவிடவேண்டியது. பின்பு தேள் கொட்டினபிடத்தில் கடையில் விற்கும் வாஸலீன் அல்லது ஆமணக்கெண்ணெய் இரண்டு மூன்று துளி அந்த இடத்தில் வைத்துச் சூடுண்டாகும்படி விடாது அழுத்தி வலதுகையால கீழ்நோக்கித் தடவவும் இரண்டு நிமிஷநேரம் நன்றாய் சூடுண்டாகத் தேய்த்துக்கொண்டு பின்வருமாறு திடசித்தத்தோடு நினைக்கவும் இதோ! என் திரேகத்திலிருந்து காந்தசக்தி வெளிப்பட்டு இம்மனிதனின் விஷம் முற்றிலும் நீக்குகின்றனவென்று பொறுமையோடும் திடச்சித்தத்தோடும் நினைக்கவும்.

6. மெற் சொன்னபடி விடாது தடவிக்கொண் டிருக்கும் போது சூடேறியவுடன் யாதொரு வலியுமின்றி சௌக்கியமாகிவிடும். பின்னும் கொஞ்சம் சடிவாயில் வலியிருந்தால் பின்னும் கொஞ்சநேரம் விடாது தடவவும்.

7. நடுக்காட்டில் வாஸலீன் எண்ணெ முதலியன கிடைக்காத இடங்களில் தேள் கொட்டிவிட்டால் ஒன்றுமில்லாமலும்தடவலாம்.

8. வலதுகையில் கொட்டிவிட்டால் இடதுகையாலும் இடதுகையில் கொட்டிவிட்டால்வலதுகையாலும் தடவவும், எப்படியானும் விடாது சூடுண்டாகக் கட்டாயம் தடவவேண்டும்.

9. எவ்வித விஷந்தீண்டினபோதிலும் விடாது சூடுண்டாகத் தேய்த்தமாத்திரத்தில் திட்டமாய் விஷம் நீங்கும்.

இது எங்கள் கைகண்ட முறை.

10. எவ்வித,சந்தேகமுமின்றி சூடுண்டாகத்தேய்த்தமாத்திரத்தில் சொஸ்தம் ஆவதற்கு சந்தேகமில்லை.

## விஷத்தைநிவர்த்திப்பதற்கு முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விதிகள்,

1. எப்போதும் கீழ்நோக்கியே தடவவேண்டும்.

2. விடாது அழுத்திச் சூடுண்டாகத் தடவவேண்டும்.

3. எண்ணெ வாஸலீன் கிடைக்காத இடத்தில் மாத்திரம் சும்மா தடவலாம்.

4. எப்படியாகிலும் சூடுண்டாகியவுடன் விஷம் நிற்பதில் தடையில்லை.

5. தேள்கொட்டிய இடத்திற்குமேல் கயிறு கட்டியிருந்தால் தாராளமாய் இரத்தம் பரவும்படி கட்டை அவிழ்த்துவிடவும்.

6. கைக்கு எட்டாத இடங்களில் மற்றொருவரைக்கொண்டு விடாது தடவும்படி செய்யவும்.

7. முக்கியமாய் நீர் திட்டமாய் நினைத்தாலும் நினைக்காத போதிலும் உன்கையால் விடாது தடவுவதிலிருந்து சூடுண்டாகிறது. அப்படிச் சூடுண்டாகியவுடன் சுத்த இரத்தம் பரவி விஷத்தை முறித்துவிடுகின்றன. சூடேரத் தேய்த்த மாத்திரத்தில் அவ்விடத்தில் புதிய இரத்தம் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு பாய்வதுபோல் ஜாஸ்தியான இரத்தம் வருகிறபடியால் விஷம்செத்துப் போகின்றன.

8. விஷந்தீண்டியவுடன் வேகமாயோடி வேர்க்கும்படி செய்தாலும் சுத்த இரத்தம் பரவி விஷம் நீங்கிவிடும்.

9. இதில்கண்ட முறைகளை நன்றாய் மனதில் ஞாபகப்படுத்திக்கொண்டு சமயோசிதம்போல் ஜெயம் பெறவும்.

10. பாம்புமுதலிய பெரும் விஷங்களை நீக்கவேண்டுமானல் என்னுல் ஏற்படுத்தியிருக்கும் மானஷ வைத்தியம் என்ற புஸ்தகத்தை வாங்கிப்படித்துப் பார்த்தால் வியாதியை சொஸ்தம் செய்தல், தூங்கவைத்தல், தூரதிருஷ்டி, தூரசிரவணம், பாம்பு விஷம் நீக்கல் முதலிய அபூர்வ விஷயங்களைச் செய்யவல்லவராகி என்றும் அழியாவீடாகிய மோட்சவீடடையும் வழியிற்சென்றின்புற்றிருக்கலாம். சுபம்.

---

சாத்தூர் சதானந்தசபை காரியதரிசி

கனம் அருணகிரி அவர்களால் இயற்றிய

# நல்லுரை.

நான்மாடகூடலென மேன்மைகொண்டோங்குதிரு
நன்மதுரை தன்னில்நின்று
நண்பருக்கன்பனு யின்பமுளசச்சிதா
நந்தனென் றொருதூதனைக்
கான்மாறியாடினேன் தன்கிருபையால்வரக்
காட்டினன் புவியின்மீதே
கல்வியிற்றேட்சியுரு நல்லசின்னத்தம்பி
கருணைக்குமென்ன சொலுவேன்
தேன்மாரிபொழிகின்ற சொல்லொழுக்கும்பெரிய
செய்திக ளமைந்ததாயுஞ்
செப்பரியயிப்பிறவி நற்பதவியிற்புகச்
செவிக்கின்ப முள்ளவாயும்
நூன்மாற்கவிதிமுறைக டவருதுபலகலையின்
நுட்பங்க ளுள்ளவாயும்
நோக்குதர்க்கிச்சைமிக வாக்குமித்தூதநேர்
நுவலவுந் தரமுளவோ.

---

176866

# முக்கிய அறிவிப்பு.

அருமையான மருந்துகள்? ஆயுள்பெருக்கத்திற்கேற்றது?

அரிய நேயர்களே! அநேக புண்ணியவசத்தால் கிடைத்தற்கரிதாகிய இவ்வுத்தம சரீரத்தை நாம் கிடைக்கப்பெற்றிருக்கிறோம். இச்சரீரத்தாலேயே வேதங்கள், உபநிஷத்முதலிய நூல்களிற் சொல்லப்பட்டுள்ள அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடையவேண்டியதிருக்கிறது.

இவ்வுண்மையை எல்லா மதஸ்தராலும் அங்கீகரித்து சித்தியடைவேண்டியதே. மேற்கூரிய புருஷார்த்தம் நான்கினையும் நாம் அவசியம் அடையவேண்டுமானல் நமக்கு திரேக சௌக்கியம் அத்யாவசியமன்றோ? ஆகையால் எங்களிடம் அநேக மருந்துகள் முக்கிய அருமையான சரக்குகளைக்கொண்டு பெரிய மேதாவிகளால் செய்யப்பட்டு கைவசம் தயாரிலிருக்கின்றன. வேண்டியவர்கள் வாங்கிச் சாப்பிட்டு தங்களுக்குள்ள வியாதி நீங்கப்பெற்று, சுகமடைந்து நீடித்த ஆயுளோடு வாழ்ந்துவர வேண்டுகின்றேன்.

## ஆரோக்கிய சஞ்சீவித்தைலம்.

# காசநோய் மருந்து.

இத்தைலமானது காசநோயைச் சேர்ந்த ஈழை, இருமல், மந்தாரகாசம், சுவாசகாசம் முதலிய எப்பேர்ப்பட்ட வியாதிகளையும் ஆறே நாளில் நீக்கிக் குணப்படுத்தும். எழுந்திருக்கமுடியாத பெலஹீனரும் எழுந்து சுகமாக உலாவுவார். காசநோயால் கஷ்டப்படுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதி தெரிந்துக்கொள்ளவும்

இன்னும் எங்களிடம் தாதுவிர்த்திக்குரிய மருந்துகள், பிரமேகநிவாரணி, மற்றும் அநேக வியாதிகளுக்கும் முக்கிய மருந்துகள் இருக்கின்றன.

☞ வைத்தியரால் கைவிடப்பட்ட எவ்வித வியாதிகளுக்கும் அபூர்வ மருந்துகளாலும் "மானஷ வைத்தியம்" என்னும் மனுஷிய காந்த சக்தியாலும் சோஸ்தம் செய்யப்படும்.

வேண்டியவர்கள் எமது விலாசத்திற்கு தங்களுக்குரிய வியாதிகளையும், குணங்களையும் விபரமாக எழுதி பதில் தெரிந்துக்கொள்ளவும்.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!



# அமெரிக்கன் மெஸ்மெரிஷம்.

இதுவரை நம்நாட்டில் வெளிவராத அமெரிக்கன் மேஸ்மேரிஷம் என்ற புஸ்தகம் வெளியாகிவிட்டது. இப்புஸ்தகத்தி னுதவியைக் கொண்டு நம் நாட்டில் மாந்திரீகம், என்று சொல்லப்படும் அநேக விதமான வேடிக்கை செய்யலாம். விளையாடும் காகிதச் சீட்டுகளில் அநேகவித வேடிக்கைச்செய்வது! ஒருபையனுக்கு அமெரிக்கன் வெஸ்மெரிஷம் செய்து நினைத்த குறிகள் சொல்லும்படி செய்தல் பையனை மெஸ்மெரிஷம்செய்து அந்தரமாக எழும்பும்படி செய்தல் அமெரிக்கன்-குடைகள் வேடிக்கை. வெறுங்கையில் அநேகம் கை குட்டைகள் வரவழைத்தல். கைகுட்டையைக் கூத்தாடும்படி செய் தல்.நாக்கை அறுத்தல், நாக்கை ஒட்டல், பெட்டிக்குள் மனிதனைப் போட்டு காணாமற்போகச்செய்யல். ஒரே சாமானை பலபேருக்கும் பலரூபமாகத் தெரியும்படி கண்கட்டுவித்தை செய்தல் இன்னும் அநேகம் தினுசு அடங்கியிருக்கின்றன. விலை ரூபா 2-0-0.

---

## மானஷவைத்தியம்.

இதில் மேஸ்மேரிஷம் ஹிப்னடிஸம், தூரதிருஷ்டி, தூரசிரவணம் மானஷவைத்தியம் முதலியன அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தினுதவியைக்கொண்டே ஒவ்வொருவரும் தமக்குண்டாகும் எவ்வித வியாதிகளையும் மருந்தில்லாமல் தமக்குத்தாமே சொஸ்தம் செய்யும் வழியைப்பற்றி எழுதி அச்சிலிருக்கின்றன. சீக்சிரத்தில் வெளியாகும். தேவையானவர்கள் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும்.

இதன் விலை ரூபா 1-0-0.

L. சின்னத்தம்பி

சச்சிதானந்தம் மானேஜர்.

கீழமாசிவீதி மதுரை.